# செப்டம்பர் – 29 – சனி

## அதி தூதர்கள் புனித கபிரியேல் மிக்கேல் இரபேயேல்

**“வானம் திறந்திருப்பதையும் கடவுளின் தூதர்கள் மானிட மகன் மீது ஏறுவதையும் இறங்குவதையும் காண்பீர்கள் எனமிக உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்”**
**யோவா. 1:51**

## முதல் வாசகம் : தானியேல் 7 : 9 – 10, 13 – 14

இவற்றுக்குப் பிறகு, இரவின் காட்சியில் கண்ட நான்காம் விலங்கு, அஞ்சி நடுங்கவைக்கும் தோற்றமும் மிகுந்தவலிமையும் கொண்டதாய் இருந்தது. அதற்குப் பெரிய இரும்புப்பற்கள் இருந்தன. அது தூள்தூளாக நொறுக்கி விழுங்கியது. எஞ்சியதைக் கால்களால் மிதித்துப்போட்டது. இதற்குமுன் நான் கண்ட விலங்குகளுக்கு இதுமாறுபட்டது. இதற்குப்பத்துக் கொம்புகள் இருந்தன. அந்தக் கொம்புகளை நான் கவனித்துப் பார்க்கையில், அவற்றின் நடுவில் வேறொரு சிறியகொம்பு முளைத்தது. அதற்கு இடமளிக்கும் வகையில், முன்னைய கொம்புகளுள் மூன்று வேரோடு பிடுங்கப்பட்டன. அந்தக் கொம்பில் மனிதக் கண்களைப்போலக் கண்களும் பெருமைபேசும் வாயும் இருந்தன. நான் பார்த்துக் கொண்டிருக்கையில், அரியணைகள் அமைக்கப்பட்டன. தொன்மை வாய்ந்தவர் அங்கு அமர்ந்தார் அவருடைய ஆடை வெண்பனி போலவும், அவரது தலைமுடி தூய பஞ்சுபோலவும் இருந்தன. அவருடைய அரியணை தீக்கொழுந்துகளாயும் அதன் சக்கரங்கள் எரிநெருப்பாயும் இருந்தன. அவர் முன்னிலையிலிருந்து நெருப்பாலான ஓடை தோன்றிப் பாய்ந்தோடி வந்தது. பல்லாயிரம் பேர் அவருக்குப் பணிபுரிந்தார்கள். பலகோடி பேர் அவர்முன் நின்றார்கள் நீதிமன்றம் தீர்ப்புவழங்க அமர்ந்தது. நூல்கள் திறந்து வைக்கப்பட்டன. இரவில் நான் கண்ட காட்சியாவது. வானத்தின் மேகங்களின்மீது மானிட மகனைப் போன்ற ஒருவர் தோன்றினார் இதோ! தொன்மை வாய்ந்தவர் அருகில் அவர்வந்தார் அவர் திருமுன் கொண்டு வரப்பட்டார். ஆட்சியுரிமையும் மாட்சியும் அரசும் அவருக்கு கொடுக்கப்பட்டன. எல்லா இனத்தாரும் நாட்டினரும் மொழியினரும் அவரை வழிபட வேண்டும் அவரது ஆட்சியுரிமை என்றுமுளதாகும் அதற்கு முடிவே இராது அவரது அரசு அழிந்துபோகாது.

**பதில்பாடல் :** ஆண்டவரே தெய்வங்கள் முன்னிலையில் உம்மைப் புகழ்வேன்.

## இரண்டாம் வாசகம் : திருவெளிப்பாடு 12 : 7 – 12

விண்ணகத்தில் போர்மூண்டது. மிக்கேலும் அவருடைய தூதர்களும் அரக்கப் பாம்போடு போர்தொடுத்தார்கள் அரக்கப் பாம்பும் அதன் தூதர்களும் அவர்களை எதிர்த்துப் போரிட்டார்கள். அரக்கப் பாம்பு தோல்வியுற்றது. விண்ணகத்தில் அதற்கும் அதன் தூதர்களுக்கும் இடமே இல்லாது போயிற்று. அப்பெரிய அரக்கப் பாம்பு வெளியே தள்ளப்பட்டது. அலகை என்றும் சாத்தான் என்றும் அழைக்கப்பெற்ற அதுவே தொடக்கத்தில் தோன்றிய பாம்பு. உலகு முழுவதையும் ஏமாற்றிய அது மண்ணுலகுக்குத் தள்ளப்பட்டது. அதன் தூதர்களும் அதனுடன் வெளியே தள்ளப்பட்டார்கள். பின்பு விண்ணகத்தில் ஒலித்த பெரியதொரு குரலைக் கேட்டேன். அது சொன்னது ”இதோ, மீட்பு, வல்லமை, நம் கடவுளின் ஆட்சி, அவருடைய மெசியாவின் அதிகாரம் ஆகிய அனைத்தும் வந்துவிட்டன. நம் சகோதரர் சகோதரிகள் மீது குற்றம் சுமத்தியவன், நம் கடவுள் திருமுன் அல்லும் பகலும் அவர்கள்மீது குற்றம் சாட்டியவன் வெளியே தள்ளப்பட்டான். ஆட்டுக்குட்டி சிந்திய இரத்தத்தாலும் தாங்கள் பகர்ந்த சான்றாலும் அவர்கள் அவனை வென்றார்கள். அவர்கள் தங்கள் உயிர்மீது ஆசை வைக்கவில்லை இறக்கவும் தயங்கவில்லை. இதன்பொருட்டு விண்ணுலகே, அதில் குடியிருப்போரே, மகிழ்ந்து கொண்டாடுங்கள். மண்ணுலகே, கடலே, ஐயோ! உங்களுக்குக்கேடு! தனக்குச் சிறிது காலமே எஞ்சியிருக்கிறது என்பதை அலகை அறிந்துள்ளது அதனால் கடுஞ் சீற்றத்துடன் உங்களிடம் வந்துள்ளது.”

## நற்செய்தி : யோவான் 1 : 47 - 51

அக்காலத்தில் நத்தனியேல் தம்மிடம் வருவதை இயேசு கண்டு, ”இவர் உண்மையான இஸ்ரயேலர், கபடற்றவர்” என்று அவரைக் குறித்துக் கூறினார். நத்தனியேல், ”என்னை உமக்கு எப்படித் தெரியும்?” என்று அவரிடம் கேட்டார். இயேசு, ”பிலிப்பு உம்மைக் கூப்பிடுவதற்கு முன்பு நீர் அத்திமரத்தின்கீழ் இருந்தபோதே நான் உம்மைக்கண்டேன்” என்று பதிலளித்தார். நத்தனியேல் அவரைப் பார்த்து, ”ரபி, நீர் இறை மகன் நீரே இஸ்ரயேல் மக்களின் அரசர்” என்றார். அதற்கு இயேசு, ”உம்மை அத்திமரத்தின்கீழ் கண்டேன் என்று உம்மிடம் சொன்னதாலா நம்புகிறீர்? இதைவிடப் பெரியவற்றைக் காண்பீர்” என்றார். மேலும் ”வானம் திறந்திருப்பதையும் கடவுளின் தூதர்கள் மானிடமகன்மீது ஏறுவதையும் இறங்குவதையும் காண்பீர்கள் என மிக உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” என்று அவரிடம் கூறினார்.

**தியானம் :** கடவுள் தம் அன்புப் பெருக்கால் படைத்த மனிதனைத் தன் சுழ்ச்சியால் வஞ்சித்த அலகை, கடவுள் மனிதனுக்கெனப் படைத்து அவையாவும் நலமெனக்கண்ட இந்த பூலோகத்தையும் தனதாக்கிக் கொண்டது. அதனால் மனிதனுக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட அனைத்தும் அந்த அலகைவசமானது. அன்றிலிருந்து மனிதன் இந்த மண்ணிலிருந்து தனது அன்றாட தேவையைப் பூர்த்தி செய்ய அனைத்தையும் தன்து கடின உழைப்பினாலேயே பெறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டான். கடவுளின் அன்பை மனிதன் சுவைத்துவிடக்கூடாது என்ற வைராக்கியத்துடனேயே அலகை அன்று முதல் இன்றுவரை செயற்பட்டுவருகிறான். உடல் ரீதியாகமட்டுமல்ல, நமது ஆன்மாக்களைக் கடவுளிடமிருந்து பிரித்துவிடவேண்டும் என்பதும் அலகைமேற்கொண்டு வரும் பெருமுயற்சியாகும். இந்தமுயற்சியில் கடவுளின் வானதூதர்களுக்கும்,அலகையின் தூதர்களுக்கும் பெரும் போராட்டம் நடந்துகொண்டே இருக்கின்னது. கடவுளின் வானதூதர்களின் தலைவரான புனிதமிக்கேல் இதற்குத் தலைமை தாங்குகின்றார் என திருச்சபை நமக்குக் கற்பித்து, இன்றையதினம் அவருக்குவிழா எடுக்கின்றது. தீமைக்கெதிரான போராட்டத்தில் அதிதூதரான புனிதமிக்கேலை கடவுள் நமக்குத் துணையாகத் தந்திருக்கின்றார். அந்தப் போராட்டத்தில் நம் ஒவ்வொருவருக்கும் பங்குஉண்டு என்பதையும், கடவுள் நம் ஒவ்வொருவரையும் உற்றுநோக்கி அவரவருக்குத் தகுந்த அழைத்தலைக் கொடுத்துவருகின்றார் என்பதையும், இறுதியில் வெற்றிவாகை இறைமகன் இயேசுவழியாகவே உண்டு என்பதையும் இன்றைய நற்செய்தி வழியாகநாம் தெரிந்து கொள்ளமுடிகின்றது. தீமையை வெறுத்து உன்னதரின் பணியில் இணைவோம். அலகையையும் அதன் சூழ்ச்சிகளையும் முறியடிப்போம்.